1975 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அறையிலே வந்து கேளுங்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, இந்த வரதாப் பட்டணம் சாலே, பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலே, இரண்டு சாலைகளும் அந்தப் பகுதியிலே இருக்கிற உழவர் பெருமக்களுக்கு மிகவும் அவசியமான திட்டங்கள். உழவர் பெருமக்கள் தங்கள் விளைபொருள்களை அந்தச்சாலைகளின் வழியாகத்தான் வண்டியிலே ஏற்றிவரவேண்டும். அப்படி இருக்கும்போது, அந்தச்சாலைகள் மிகவும் பழுதுண்ட நிலையிலே இருக்கின்றன. ஆகவே, இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற வறட்சி நிவாரணப் பணியிலே இவற்றையும் சேர்த்து, இப்பொழுதே இரண்டு சாலைகளையும் சீர் திருத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வறட்சி நிவாரண வேலைகளிலே இந்தப் பாதைகளில் ஜல்லி போடக் கூடாது என்று மத்திய அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. ஆகவேதான் வறட்சிப் பணிகளில் ஜெல்லி போடுகின்ற வேலையையும் தார் போடுகின்ற வேலையையும் செய்ய முடியாது. மணல் வேலை மட்டுதான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இருந்தாலும் தலப் பொறியாளர்கள் இது பற்றிப் பரிசீலனத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புலவர் பழனிச்சாமி அவர்கள் பழய வட்டம் ஆயக்குடிப் பகுதியில் உள்ள வரதாப்பட்டணம் சாலே, பெரியகுளம் கண்மாய்க் கரைச்சாலே ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைப்பது பற்றி இரண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதில் வரதாப் பட்டணம் சாலே, ஆர்.டி.எல்.ஏ. சாலையிலே வருகிறது. அதனாலே அது அந்தத் துறைக்குப் போயிருக்கிறது, இது பொதுப் பணித் துறையைச் சேர்ந்ததால், இந்த இலாகாவில் வந்திருக்கிறது.

ஆரணி ஆற்றின் கரைகள்.

*482 வினா— திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளைப் பலப்படுத்த Revetment கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத்திட்டம் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஆரணி ஆற்றின் கரையில் ரிவெட்மென்ட் அமைக்கிற இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு

வது வறட்சி நிவாரணப் பணியில் எடுத்துக் கொண்டால் வேலை வாய்ப்புக் கிடைக்கும். இது நீண்டகாலம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, தனி ஆணை பிறப்பித்து, இந்த ஆண்டே இதனை எடுத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுவும் அதேபோல்தான். ரிவெட்மென்ட் கட்டுவது வறட்சி நிவாரண வேலையின் கீழ் வராது என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. என்றாலும், இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது; அரசு பரிசீலத்துக் கொண்டிருக்கிறது.

Consumers' Council of Tamil Nadu

*483 *Q.*— THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that a delegation of the Consumers' Council of Tamil Nadu met the State Food Minister on 19th April 1974 ; and

(*b*) if so, the details of request made by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்திய உபயோகிப்பாளர் கூட்டமைப்பின் நிர்வாகிகள், உணவு விடுதிகளில் விற்கப்படும் தின்பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென கோரினர்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இதன்பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? சர்க்கார் உணவுக் கொள்கையாக கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டதே, அதுவும் இம்மாதிரிதானா? அதற்கு எவ்வாறு ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ்ஸ் நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எங்கெங்கே தேவையென்று அமைக்க முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் கூட்டுறவுத் துறையிலே முயற்சி செய்யலாம். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையினும் முன்னாலிருந்த அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளைக் கலந்து பேசி உணவு விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்தார்கள்.